29.06.2020

**அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன். கலங்காதே,**

**நான் உன் கடவுள். நான் உனக்கு வலிமை அளிப்பேன்.**

**- எசா 41:10**

ஆண்டவர் இயேசுவில் எனது பாசத்திற்குரிய சகோதரிகளே!

**நமது அமலவையின் பிறந்த நாள் நல்வாழ்த்துக்களை அன்புடன் உரித்தாக்குகிறேன்.**

ஒரு தாய் தனது குழந்தைகளுக்குப் பிறந்தநாள் விழா கொண்டாடுவது மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்று! பிறந்த நாள் கேக், இனிப்பு வகைகள், உணவு வகைகள், அன்பளிப்புக்கள், புதிய ஆடைகள்… என அனைத்தையும் அன்னை தனது பிள்ளைகளுக்கு பிறந்த நாள் பரிசாக அளிப்பது வழக்கம். அருமைச் சகோதரிகளே! ஜூலை 2ம் நாள், நாம் 785 பேரும் இணைந்து நமது அன்னையாம் அமலவைக்கு பிறந்த நாள் சிறப்பிக்க இருக்கின்றோம். நமது சொந்த அன்னையர்கள் இவ்வுலகில் நமக்கு பிறப்பு கொடுத்து, 18, 20 அல்லது 25 வயது வரை வாழ வைத்தார்கள். அன்று முதல் இன்று வரை நமது அமலவைத் தாய் நமக்கு பயிற்சி, கல்வி, வாழ்வு, அன்பு, மகிழ்ச்சி, பாதுகாப்பு, அனுபவங்கள், வாய்ப்புக்கள்… என அனைத்தும் தந்து, கண்ணின் மணியெனக் காத்து வழிநடத்தி வருகின்றாள். எனவே நாம் ஜூலை 2ம் நாள் முழுவதும் பலமுறை நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து மனதாரச் சொல்வோம். ***“I love my Mother CIC”***

தற்போதைய கொரோனா காலச்சூழலில் ஐந்தாவது முறையாக இம் மடல் வழியாக உங்களைச் சந்திக்கிறேன். உலகையே அச்சுறுத்தி உயிர்களைக் காவு கொண்டு, ஒவ்வொரு நாளும் தனது இயல்புகளை மாற்றிக் கொண்டிருக்கிறது கொரோனா நோய்க்கிருமி. தொற்றிக் கொள்ளும் ஒவ்வொரு உடலிலும் ஒரு பாதிப்பை வெளிப்படுத்துகிறது. இதனால் ஏற்படும் ஊரடங்கும் நீடித்துக் கொண்டே செல்கிறது. இதனால் ஏழை, எளிய மக்கள் வேலை இழந்துள்ளனர். உணவு இன்றி, வறுமைச் சூழலில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து

வருகின்றார்கள். கடன் தொல்லைகளைத் தாங்க இயலாமலும், உணவுக்கு வழி இல்லாமலும் தற்கொலைச் சம்பங்களும் அதிகரித்து வருகின்றன.

உலகைப் படைத்துக் காப்பதே இறையன்பு! அதை அழிப்பது அன்று. இறைவன் கொடுத்திருக்கும் அறிவாற்றலைப் பயன்படுத்தி, மனித வரலாற்றில் நம்மோடு பயணிக்கும் இறைவனைக் கண்டுகொள்ளும் வாய்ப்பைத் தந்திருக்கிறது கொரோனா. இறைவன் மருத்துவர்களோடு மருத்துவராக, சுகாதாரப் பணியாளர்களில் ஒருவராக, மக்களைக் காப்பாற்றும் முன்னெடுப்புக்களில் முதல்வராக நமக்காகச் செயலாற்றுகிறார் என்பதை உணர்வோம்.

❖ கொரோனா நோய்த் தொற்று என்பது உலக முடிவு அல்ல. இது நாம் ஏற்க வேண்டிய ஒரு சவால். இதில் நாம் காணும் வெற்றியே, நமது இறை நம்பிக்கை சூடும் வெற்றி வாகை! ஆகவே நிறைந்த நம்பிக்கையோடு இன்றைய சூழலை எதிர்கொள்வோம். நெருக்கடியான இந்த வேளையிலும் இறைவன் நம்மைப் பார்த்துக் கேட்கின்றார், ***யாரை நான் அனுப்புவேன்? அதற்கு இதோ நான் இருக்கிறேன். அடியேனை அனுப்பும் (எசா 6:8)*** என்ற பதிலுரையும் நமக்கானவையே. எனவே வாழ்விற்கான நமது ஏக்கமும், கொரோனாவிலிருந்து விடுதலை பெறுவதற்கான நமது முயற்சியும் தொடர்ந்து இடம் பெறவேண்டும். நமது அயலாருக்குப் பணிகள், உதவிகள் புரியவும், பரிந்துரைச் செபங்களை மேற்கொள்ளவும் அழைப்புப் பெற்றுள்ளோம்.

***நாம் அனைவரும் ஒரே குடும்பமாக விளங்கும்படியாக இறைவன் தம்மையே நமக்கு ஒரு கொடையாக வழங்கியதுபோல், நாமும் பிறருக்கு ஒரு கொடையாக மாற வேண்டும்.***

***– திருத்தந்தை பிரான்சிஸ்***

❖ நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆம் அமலவைச் சொந்தங்களே, நீங்கள் ஒவ்வொருவரும் அமலவைக்கு முக்கியமானவர்கள். எனவே இந்நாட்களில் தேவையற்ற பயணங்களைத் தவிர்த்து, நமக்கான அமலவை இல்லங்களில் பாதுகாப்பாக இருக்க உங்களை நினைவூட்டுகிறேன்.

❖ ஊரடங்கு நாட்கள் நீடித்துக் கொண்டே செல்வதால் தளர்ச்சி அடைய வேண்டாம். காலத்தை பயன்படுத்த எத்தனையோ அரிய வாய்ப்புக்கள் உள்ளன. பயன் படுத்தித்தான் பார்ப்போமே! Online Courses பல free ஆகவே இந்நாட்களில் ஏற்பாடு செய்யப் படுகின்றன. முடிந்தவர்கள் கலந்து கொள்ளலாம்.

❖ நமது இல்லங்களில் இருக்கும் நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், Library Books ஆகியவற்றை வாசிக்கலாம். அறிவை, மனதை விரிவாக்கலாம்.

- ❖ அமலவை வரலாற்றுப் புத்தகங்கள், முறியா உறவின் மூவர், படரும் கொடிக்குப் பவள விழா, அமலவை விடியலின் விலாசம், உளி தேடும் சிற்பம், ஒரு துளி ஓடும் நதி இவற்றை வாசித்து, செபித்து அமலவையின் மீது நமக்குள்ள அன்பை ஆழமாக்கலாம்.
- ❖ நமது சபையின் நிறுவுனரும், இறை ஊழியருமான தந்தை அகுஸ்தின் பெரைரா பற்றி மூன்று மாதங்களுக்கு ஒரு பதிப்பாக வரும் சிற்றேடுகளை வாசித்து, தந்தையின் மீது நமக்குள்ள பக்தியை அதிகப் படுத்தலாம்.
- ❖ எப்போதும் நமது இல்லங்களிலும், நம்மிடமும் இருக்கும் உயிருள்ள இறைவனின் காவியமாம் விவிலியத்தை வாசித்து, சிந்தித்து, செபித்து, தியானித்து வாழ்வாக்கலாம்.
- ❖ கொரோனாவின் பிடியிலிருந்து துறவிகள், தமிழக மக்கள், இந்திய மக்கள் அகில உலக மக்கள் காக்கப்பட வேண்டும் என்று குறைந்தது வாரத்தின் 3 நாட்களாவது திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் ஆராதனை வைத்து செபிக்கலாம்.
- ❖ அடுத்த மூன்று நாட்கள் அதாவது செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாட்களில் இல்லத்தில் சகோதரிகள் அனைவரும் இணைந்து, இதே கருத்துக்களுக்காக அகில உலகின் அன்னையான மரியாவை நோக்கி செபமாலை செபிக்கலாம்.
- ❖ ஜூலை, ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்கள் மட்டும் நம் சபையின் ஒழுங்கு புத்தகத்திலிருந்து ஒரு சிறு பயிற்சியைச் செய்வோமா? ஒவ்வொரு இல்லத்திலும் அனைவருக்கும் வசதியான ஒரு நாளைத் தேர்வு செய்து, வாரம் ஒரு நாளில் ஒரு மணி நேரம் ஒதுக்கி, குழுமமாக அமர்ந்து ஒழுங்குகளை வாசித்து, அவை நமக்கு உணர்த்தும் உள்ளொளிகளைப் பகிர்ந்து கொள்வோமா?

  - ➢ ஜூலை முதல் வாரம் ஒழுங்கு எண் 88 முதல் 91 வரை
  - ➢ ஜூலை 2ம் வாரம் ஒழுங்கு எண் 92 முதல் 95 வரை
  - ➢ ஜூலை 3ம் வாரம் ஒழுங்கு எண் 96 முதல் 100 வரை
  - ➢ ஜூலை 4ம் வாரம் ஒழுங்கு எண் 101 முதல் 104 வரை
  - ➢ ஆகஸ்ட் முதல் வாரம் ஒழுங்கு எண் 105 முதல் 108 வரை
  - ➢ ஆகஸ்ட் 2ம் வாரம் ஒழுங்கு எண் 109 முதல் 112 வரை
  - ➢ ஆகஸ்ட் 3ம் வாரம் ஒழுங்கு எண் 113 முதல் 116 வரை
  - ➢ ஆகஸ்ட் 4ம் வாரம் ஒழுங்கு எண் 123 முதல் 126 வரை

**அன்பின் மூலம் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்** என்றார் **விவேகானந்தர்.** மேற்சொன்ன முயற்சிகளை நாம் அமலவையின் மீது கொண்ட அன்போடு செய்யும்போது, அன்னையாம் அமலவையும் அவளின் பிள்ளைகளாம் நாமும் நிச்சயம் ஆனந்தத்தை அனுபவிப்போம்.

**எனது அன்புச் சகோதரிகளே,**

மாவீரன் நெப்போலியன் பிரான்ஸ் நாட்டின் அரசராய் இருந்தபோது, அந்நாட்டில் உலகப் புகழ் பெற்ற ஒரு சிற்பியும் இருந்தார். அந்தச் சிற்பி செப மனநிலையுடன் அழகான இயேசுவின் சுரூபம் ஒன்றை ஆறு ஆண்டுகள் உழைத்து உருவாக்கினார். மக்கள் பலர் இச்சுரூபத்தைப் பார்த்து இறை உணர்வில் கண்ணீர் வடித்தார்கள்.

மாவீரன் நெப்போலியனும் அச்சுரூபத்தைப் பார்த்து வியந்து, சிற்பியைப் பாராட்டினார். அவரிடம் காதல் தெய்வம் டயானாவின் சிலையைத் தனக்கு செய்து தரும்படி கேட்டார். ஆனால் சிற்பி இயேசுவை வடித்த இக்கரங்களால் டயானாவைச் செய்ய முடியாது என்று மறுத்து விட்டார்.

நெப்போலியன் ஆச்சரியமடைந்தார். ஒரு சாதாரண சிற்பி, இயேசுவின் சுரூபத்தை வடித்ததால் மட்டுமே அவர்மீது இவ்வளவு பற்றும் பாசமும் கொண்டிருந்தார் என்றால், சிறிய வயதிலிருந்து அவரது உருவத்தை எனது இதயத்தில் வரைந்திருக்கும் நான் எவ்வளவு ஆழமாக அவரை அன்பு செய்ய வேண்டும் என்று சிந்தித்து, தனது இதயத்தையும் இறை இயேசுவின் மீது திருப்ப ஆரம்பித்தார். அன்பிற்குரியவர்களே! நாமும் நமது பிறப்பால், அருட்சாதனங்களால் நமது இதயத்தில் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள். அமலவையில் நமது வாக்குறுதிகளால், இயேசுவின் உருவத்தை மட்டுமே நமது இதயங்களில் தாங்கிக் கொண்டவர்கள். அவருக்காக, அவரால், அவரைப் போல் வாழ வேண்டும் என்று விரும்பி வந்தவர்கள். நம்மையே முழுமையாக அர்ப்பணித்தவர்கள். ஆகவே இயேசு மட்டுமே நமது இதயத்தின் மையத்தில் இருக்கட்டும்!

## HAPPY BIRTHDAY LOVING SISTERS




**அமலவையில் உங்களின் உடன்பிறப்பு**

**(சகோ. அந்தோணி புஷ்ப ரஞ்சிதம் சிஜசி)**